

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம், தண்டுரை அரசு மாதிரி பள்ளியில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் விடுதி கட்டும் பணிகளுக்கும் ஆரணி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில்ரூ.1.21 கோடி மதிப்பீட்டில் 6 வகுப்பறை கட்டடம் கட்டும் பணிகளுக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ்தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அடிக்கல் நாட்டி வைத்தார்கள் உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், ஆணையர் ரா.சரண்யா, மண்டல குழு தலைவர் ஜோதிலட்சுமி பகுதி செயலாளர்கள் ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், முதன்மை கல்வி அலுவலர் சொ.கற்பகம், பொதுப்பணி துறை செயற்பொறியாளர், தேவன், பொன்னேரி மாவட்ட கல்வி அலுவலர் எம்.ஐயப்பன், தனியார் கார் நிறுவன துணை பொது மேலாளர்(சி.எஸ்.ஆர்) ஹு மின் ஓ, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

### கருப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுத்திட

# பள்ளி மாணவிகளுக்கு HPV - தடுப்பூசித் திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்ட ஆவணத்தை வெளியிட்டார்!

**சென்னை, ஜன.28-**

**கருப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுத்திடும் வகையில் முதற்கட்டமாக தர்மபுரி, பெரம்பலூர், திருவண்ணாமலை மற்றும் அரியலூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் 30,209 பள்ளி மாணவிகளுக்கு HPV (Human Papilloma Virus) தடுப்பூசி வழங்கிடும் திட்டத்தை தொடங்கி வைத்து, தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கத்தின் செயல் திட்ட ஆவணத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.1.2026) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் கருப்பைவாய்ப் புற்றுநோயை தடுத்திடும் வகையில் முதற்கட்டமாக தர்மபுரி, பெரம்பலூர், திருவண்ணாமலை மற்றும் அரியலூர் ஆகிய நான்கு மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 14 வயதுடைய 30,209 மாணவிகளுக்கு HPV (Human Papilloma Virus) தடுப்பூசி வழங்கிடும் திட்டத்தினை தொடங்கி வைத்தார். மேலும், தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கத்தின் செயல் திட்ட ஆவணத்தை வெளியிட்டார்.

தமிழ்நாட்டில், ஆறு நோய்களை தடுப்பதற்கான விரிவுபடுத்தப்பட்ட தடுப்பூசி திட்டம் 1978-இல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தை மேலும் வலுப்படுத்துவதற்காக, நாடு தழுவிய தடுப்பூசி திட்டம் 1985-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

தடுப்பூசி திட்டத்தின் கீழ், 11 வகையான தடுப்பூசிகளை கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் அளித்து 12 வகையான தடுப்பூசியினால் தடுக்கப்படக்கூடிய நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 1.2 இலட்சம் பெண்களுக்கு கருப்பைவாய்ப் புற்றுநோய் புதிதாக கண்டறியப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் பெண்களை பாதிக்கும் புற்றுநோய்களில் மார்பக புற்றுநோய்க்கு அடுத்தபடியாக, கருப்பைவாய் புற்றுநோய் கண்டறியப்பட்டு வருகிறது. ஹெச்.பி.வி வைரஸ் (HPV - Human Papilloma Virus) தொற்றின் காரணமாக ஏற்படும் கருப்பைவாய் புற்றுநோயை ஹெச்.பி.வி தடுப்பூசி செலுத்துவதின் மூலம் தடுக்க இயலும்.

**HPV (Human Papilloma Virus) தடுப்பூசி வழங்கிடும் திட்டத்தினை தொடங்கி வைத்தல்**

தமிழ்நாடு அரசின் 2025--2026 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், கருப்பைவாய் புற்றுநோயை தடுக்கவும், தமிழ்நாட்டில் அந்நோயினை அறவே அகற்றிடவும் HPV (Human Papilloma Virus) தடுப்பூசியை 14 வயதுடைய அனைத்து பெண் குழந்தைகளுக்கும் படிப்படியாக வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கென 2025 - 26 ஆம் ஆண்டில் 36 கோடி ஒதுக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக, தடுப்பூசி திட்டத்தினை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்த 14 வயதுடைய 3,38,649 பெண் குழந்தைகளுக்கு HPV தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, முதற்கட்டமாக (Pilot phase) கருப்பை வாய் புற்றுநோய் பாதிப்பு அதிகம் உள்ள தர்மபுரி, பெரம்பலூர், திருவண்ணாமலை மற்றும் அரியலூர் ஆகிய 4 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அம்மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு சார்ந்த பள்ளிகளில் 30,209 மாணவிகளுக்கு HPV (Human Papilloma Virus) தடுப்பூசி வழங்கிடும் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் தொடங்கி வைத்தார். அதன் தொடர்ச்சியாக, மாநிலம் முழுவதும் உள்ள எஞ்சிய மாவட்டங்களில் உள்ள 14 வயதுடைய பெண் குழந்தைகளுக்கு இத்தடுப்பூசி செலுத்தப்படும்.

**தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்க செயல் திட்ட ஆவணம் வெளியீடு (Tamil Nadu Cancer Care Mission)**

புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பை மேம்படுத்த தமிழ்நாடு அரசு கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து பல்வேறு முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கட்டமைப்பு மேம்பாடு, ஆரம்பநிலை புற்றுநோய் கண்டறிதல், மற்றும் மேம்பட்ட சிகிச்சை வழங்குதல் உட்பட பல்வேறு அம்சங்கள் இதில் அடங்கும்.

புற்றுநோய் என்பது மக்களின் நலத்திற்கு பெரும் தீங்காக இருந்து வருகிறது. குறிப்பாக, வாழ்க்கை முறை சார்ந்த மாற்றங்களால் ஏற்படும் புற்றுநோய்கள் அதிகரித்து வருவதால், ஒருங்கிணைக்கப்பட்ட விரிவான அணுகுமுறையை செயல்படுத்துவது அவசியமாகிறது.

தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கமானது நோய் தடுப்பு, ஆரம்பநிலையில் கண்டறிதல், நோயறிதல், சிகிச்சை, வலி நிவாரண சிகிச்சை நீடித்த மற்றும் தரமான வாழ்வு ஆகியவற்றை உள்ளடக்கி, விரிவுபடுத்தி புது நோயால் ஏற்படும் முன்கூட்டியே நிகழும் இறப்புகளைக் குறைப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

ஒருங்கிணைந்த இந்த இயக்கத்தில், மேம்பட்ட தொழில்நுட்பங்கள், சமூகப் பங்களிப்பு மற்றும் புற்றுநோய் ஆராய்ச்சி ஆகியவற்றைப் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

புற்றுநோய் தாக்கத்தை குறைப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கத்தின் மூலம் வரும் 5 ஆண்டுகளில் பல தொலைநோக்கு மற்றும் புதுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது. இதன் முதல் நடவடிக்கையாக தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கத்தின் செயல் திட்ட ஆவணத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று (27.1.2026) வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்க பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. எ.அருண் தம்புராஜ், தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட இயக்குநர் திருமதி ஆஷா அஜித், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் டாக்டர் கே.சோமசுந்தரம், TAFE நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி மல்லிகா ஸ்ரீனிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், காணொலிக் காட்சி வாயிலாக போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் க.தர்பகராஜ், பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் திருமதி ந.மிருணாளினி, அரியலூர் மாவட்ட ஆட்சியர் பொ.இரத்தினசாமி, தர்மபுரி மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் நடைபெற்ற மொழிப்போர் தியாகிகளுக்கு நடைபெற்ற வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் மாவட்ட கழக செயலாளர் நல்லசிவம் தலைமையில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் குரு முன்னிலையில் தி.மு.க. மாநில வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் சிறப்புரையாற்றினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர் அந்தியூர் வெங்கடாசலம், சிந்து ரவிச்சந்திரன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் அந்தியூர் மகாலிங்கம், துணை அமைப்பாளர்கள் சுப்ரமணியன் குமார் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ந.கோபால் — எஸ்.டி.கருணாநிதி வரவேற்புரை! திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றிய கழக பொருளாளர்

# எறையூர் ப.பரமசிவன் - இராஜேஸ்வரி இல்லத் திருமண வரவேற்பு! அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில்!

## டி.ஆர்.பாலு எம்.பி. — கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ.—க.செல்வம் எம்.பி.—கழகத்தினர் பங்கேற்பு!

*காஞ்சிபுரம், ஜன.28-*

*திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொருளாளர் - ஒன்றிய கவுன்சிலர் எறையூர் ப. பரமசிவன் - இராஜேஸ்வரி பரமசிவன் இல்லத் திருமண விழா வரவேற்பு விழா இன்று (28.01.2026-புதன் கிழமை) மாலை 6 மணியளவில் வல்லக் கோட்டை ஸ்ரீ பிரம்மசக்தி மஹாலில் நடைபெறுகிறது.*

*இம்மணவிழாவிற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை யேற்று நடத்திவைத்து, மணமக்கள் ப. சிவசக்தி (எ) ஸ்டேன்லி - இரா.ரதிதேவி (எ) இவாஞ்சலின் ஆகியோரை வாழ்த்துகிறார்.*



*ஒன்றியச் செயலாளர் ந. கோபால், எஸ்.டி.கருணாநிதி வரவேற்கின்றனர்.*

*த.துரைசாமி, படப்பை ஆ.மனோகரன், இரா.சத்தீஸ்குமார், மா.கணேஷ் பாபு, மாலதி போஸ்கோ ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இம்மணவிழா வரவேற்பில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கு. செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ., க. செல்வம் எம்.பி., மீ.க. வைத்தியலிங்கம், இ. கருணாநிதி எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ., து. மூர்த்தி, வெ. விசுவநாதன், வீ. தமிழ்மணி, அ. தமிழ்மாறன், அ. வசந்த குமாரி, கோ. காமராஜ், மு. ஆதிமாறன், காந்தி சத்தீஸ்குமார், சரஸ்வதி மனோகரன், இந்திராணி சுப்பிரமணி உள்ளிட்ட ஒன்றிய, நகர, பகுதிச் செயலாளர்கள், தலைவர்கள், அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

*எஸ்.ஆர்.எல்.இதயவர்மன் ஜெ.சண்முகம் எஸ். சேகர் கோ.சத்தியமூர்த்தி வே.கருணாநிதி எஸ்.ஜபருல்லா த.ஜெயக்குமார் எம். கே.டி.கார்த்திக் பையனூர் எம்.சேகர் ஏ.வந்தேமாதரம் பி.சந்தானம் எம்.டி.லோகநாதன் இ.மணி பொதுக் குழு உறுப்பினர்கள் எஸ். கே.இப்ராகிம் எம்.ஆர்.சீனிவாசன் ஆர்.எஸ்.சங்கர் எஸ். சதிஷ் இரா.ஐயப்பன்,*

*கோல்டு டி.பிரகாஷ் எல்.பிரபு ப.இராமமூர்த்தி ஜா.செந்தில்தேவராஜ் வீ.விஜயகுமார் எஸ். கே.பாலா (எ) பால்ராஜ் தி.க.பாஸ்கரன் டி.எஸ்.எம். ஜெயகரன் பொன்.இரமேஷ்கவி எஸ்.கர்ணன் ஆர். கே.சையத் யூசப் மாங்காடு ஆர்.பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.*


### ஜல்லிக்கட்டுப் போட்டிகளுக்கு 'ஆன்லைன்' முறை ரத்து!

# முதல்வருக்கு - ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு வீரர்கள் சார்பில் நன்றி!

## சட்டப் பேரவையில் — அமைச்சர் பி.மூர்த்தி பேச்சு!

*சென்னை, ஜன. 28-*

*சட்டப் பேரவையில், ஜன. 23 அன்று - அமைச்சர் பி.மூர்த்தி, ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கு அனுமதி கோரல் உள்ளிட்டவைகளில் பல்வேறு தளர்வுகளும், சலுகைகளும் வழங்கி அறிவித்த முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.*



*அவர் பேசியதாவது:-*

*தமிழர்களுடைய பாரம்பரியமான வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுப் போட்டியை உலக புகழ் பெற்ற அலங்காநல்லூரில் பங்கேற்று, சிறப்பித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், பல்வேறு ஜல்லிக்கட்டு அமைப்புகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சந்தித்து முன்வைத்த கோரிக்கைகளை பரிசீலனை செய்து, ஜல்லிக்கட்டுக் காளை பிடி வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில், நம்முடைய கால்நடைத் துறையில் அரசு பணி வழங்கப்படும் என்ற செய்தியும், (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று ஜல்லிக்கட்டு காளைகளுக்கு மருத்துவ மையம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்கள்.*

*பல்லாண்டு காலமாக இருந்துவந்த கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுமட்டுமல்ல, அரசு நடத்தும் ஜல்லிக்கட்டுப் போட்டிகளைத் தவிர்த்து பிற ஜல்லிக்கட்டுப் போட்டிகளுக்கு ஆன்லைன் முறையை ரத்து செய்தும், உறுதி மொழிப் பத்திரம் அளிப்பதிலிருந்தும், மாடுபிடி வீரர்கள் காப்பீடு பெறுவதிலிருந்தும் விலக்களித்து உத்தரவு வழங்கியுள்ள முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்புகளை வெளியிட்ட முதலமைச்சர் அவர்களுக்கு மதுரை மாவட்ட மக்களின் சார்பில் மட்டுமன்றி, தமிழ்நாடு முழுவதும் உள்ள ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு வீரர்கள் மற்றும் பொது மக்களின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*இவ்வாறு அவர் பேசினார்.*

# தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287)பணிமனை நிர்வாகிகள் தேர்தல் 31.01.2026 அன்று நடைபெறுவதாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. ஏற்கெனவே நடைபெற்று வருகின்ற சமரசப் பேச்சுவார்த்தை தொடர்வதால், ஆணையாளர் வழக்கறிஞர் திரு. அ.சரவணன் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தேர்தல் நடைபெறும் நாள் ஒத்தி வைக்கப்படுகிறது.

சமரசத் தீர்வு எட்டவில்லை யென்றால் 15.02.2026 அன்று அச்சங்கத்தின் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

**கலைஞரகம்**
சென்னை - 17
நாள்- 27.01.2026

**மு.சண்முகம் Ex.MP**
பொதுச் செயலாளர்
தொ.மு.ச. பேரவை



தாம்பரம் தொகுதிக்குட்பட்ட முடிச்சூர் ஊராட்சி பகுதியில் 77ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு முடிச்சூர் ஊராட்சியில் கிராம சபைக் கூட்டம் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா தலைமையில் நடைபெற்றது. 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள், மகளிர் குழுக்கள், நலச்சங்க நிர்வாகிகள், மக்கள் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் திமுக மற்றும் மாணவர் அணி சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் கும்மிடிப்பூண்டி பஜார் வீதியில் மாவட்ட கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் ஏற்பாட்டில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வெற்றி (எ) ராஜேஷ் வரவேற்பில் நடைபெற்றது. இதில் கழக மருத்துவ அணி செயலாளர் நா.எழிலன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு வீரவணக்க நாள் வீச்சு உரையாற்றினார். உடன் கும்மிடிப்பூண்டி எம்எல்ஏ டி.ஜெ.கோவிந்தராஜன், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் காஞ்சி பாஸ்கர், எழும்பூர் கோபி, விக்னேஷ் உதயன், நிர்வாகிகள் ஜெ.மூர்த்தி, மு.பகலவன், சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, மு.கதிரவன், எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், பி. வெங்கடாஜலபதி, பா.செ.குணசேகரன், கே.வி.ராமமூர்த்தி, டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், கி.வேணு ஆனந்த், இரா.அறிவழகன், டி.கே.சந்திரசேகர்.மு.மணிபாலன், ஆ.சத்தியவேலு நா.பரிமளம், நா.செல்வசேகரன், ஜான்பொன்னுசாமி, மு.முரளிதரன், ஆ.ராஜா, ஏ.ஆர்.டி.உதயசூரியன், வே.ஆனந்தகுமார், க.சு.ஜெகதீசன், ஜி.ரவிக்குமார், அபிராமிகுமரவேல், பி.முத்து, க.சு.தமிழ்உதயன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.